அவன் மிகுந்த திரவியத்தையும் ஆஸ்தி பூஸ்திதியையும் சம்பாதித்தான். Avan migunda diraviyattaiyum âstibûstitiyaiyum sambâdittân.	He has amassed much wealth and property.
இந்த வீட்டில் ஒரு கூடமும் மூன்று அறைகளும் உண்டு. Inda vîṭil oru kûḍamum mûnrru arraigaḷum unḍu.	In this house there is one hall and three rooms.
நீ இச்சங்கதியைக் கேள்விப்பட்டு எவ்வளவு காலமாயிற்று ? Nî iççangadiyaik kêḷvippaṭu evvaḷavu kâlamâyiṯṯu ?	How long is it since you heard this news ?

Lesson XXVIII.

அவர்கள் தங்கள் தாய்தந்தைகளோடு வாசம் பண்ணுகிறார்கள். Avargaḷ tangaḷ tâytandaigaḷôḍu vâsam paṇṇugirrârgaḷ.	They are living with their parents.
நாங்கள் நதியோரத்தில் உலாவி வந்தோம். Nângaḷ nadiyôrattil ulâvi vandôm.	We have taken a walk on the bank of the river.

நீ எவ்வளவுக்கு இதை என் எஜமானுக்கு விற்பாய் ?
Nî evvaḷavukku idai en ejamânukku virrpây ?

For how much will you sell this to my master ?

அங்கே சாப்பிடவும் குடிக்கவும் ஏதாகிலும் கிடைக்குமா ?
Angê sâppiḍavum kuḍikkavum êdâgilum kidaikkumâ ?

Is there anything to be had there for eating and drinking ?

அவர்கள் எங்கே போயிருக்கிறார்களென்று ஏதாகிலும் உனக்குத் தெரியுமா ?
Avargaḷ engê pôyirukkirârgaḷenrru êdâgilum unakkut teriyumâ ?

Are you at all aware where they are gone ?

நாங்கள் திரும்பிவருமளவும் இங்கேயிரு.
Nângaḷ tirumbivarumaḷavum ingê yiru.

Remain here until we return.

கத்தி என்கையிலிருந்து தவறி ஆற்றில் விழுந்தது.
Katti enkaiyilirundu tavarri âṯṯil viṛundadu.

The knife fell from my hand into the river.

தமிழ்ப்பேசுவதில் நம்முடைய சாதாரணமான குற்றம் என்னவென்றால் ஒவ்வொரு எழுத்தையும் பூர்த்தியாய் உச்சரிக்காமல் போவதே.
Tamiṛppêsuvadil nammuḍaiya sâdâraṇamâna kuṯṯam ennavenrrâl ovvoru eṛuttaiyum pûrttiyây uççarikkâmal pôvadê.

In speaking Tamil, our general fault is in not pronouncing each individual letter fully.

தன்னைச் சூழ்ந்திருக்கும் ஜெனங்களின் பாஷையைப்பேசமாட்டாதவன் சிலவேளை பட்டினியாயிருக்கவேண்டிய அவசியம் வரும்.
Tannaiç sûṛndirukkum jenangaḷin pâshaiyaippêsamâṭâdavan silavêḷai paṭiniyayirukkavêṇḍiya avasiyam varum.

A man who cannot speak the language of the people among whom he sojourns may sometimes be in danger of starving.

அவன் தன் சுயபாஷையால் அவனோடு பேசவேண்டுமென்று தங்களைவிரும்புகிறான்.
Avan tan suyapâshaiyâl avanôḍu pêsavêṇḍumenrru tangaḷai virumbugirân.

He desires you to speak with him in his own language.

Lesson XXIX.

வெய்யில் காய்கிறது. Veyyil kâygirradu.	The sun shines.
காற்று அடிக்கிறது. Kâṯṯu aḍikkirradu.	The wind blows.
மழை பேய்கிறது. Maṛai pêygirradu.	Rain falls.
நெருப்பு எரிகிறது. Neruppu erigirradu.	Fire burns.
மின்னல் மின்னுகிறது. Minnal minnugirradu.	The lightning shines.
வீட்டின் கூரை உயரமானது. Vîṭin kûrai uyaramânadu.	The roof of the house is high.
அறையின் சுவர் கனமானது. Arraiyin çuvar ganamânadu.	The wall of the room is thick.
வண்டியின் சக்கரம் உருளுகிறது. Vaṇḍiyin çakkaram uruḷugirradu.	The wheel of a cart turns round.
பானையின்வாய் அகலமானது. Pânaiyinvây agalamânadu.	The mouth of the pot is wide.
மேசையின்கால் ஒழுங்கானது. Mêsaiyinkâl oṛungânadu.	The leg of the table is straight.
கதவின் பூட்டு உடைந்து இருக்கிறது. Kadavin pûṭu uḍaindu irukkirradu.	The lock of the door is broken.
கதவு பூட்டி இருக்கிறது, நான் உள்ளே போகக்கூடாது. Kadavu pûṭi irukkirradu, nân uḷḷê pôgakkûḍâdu.	The door is shut, I cannot get in.
எல்லாவற்றையும் கிடங்கில் பத்திரமாய் வை. Ellâvaṯṯaiyum giḍangil battiramây vai.	Put every thing carefully in the godown.
வண்டிமேலே அந்த மூட்டையைப் போடு. Vaṇḍimêlê anda mûṭaiyaip pôḍu.	Put that bundle upon the bandy.

Lesson XXX.

மெத்தநாளாய் உன்னை நான் பார்க்கவில்லையே. Mettanâḷây unnai nân pârkkavillaiyê.	I have not seen you for many days.

எங்கே போய் இருந்தாய் ? Engê pôy irundây ?	Where have you been ?
நீ வந்தபோது மிகவும் வேலையாயிருந்தேன். Nî vandapôdu migavum vêlaiyâyirundên.	I was very busy when you called.
கொஞ்சநேரம் உட்கார்ந்து இளைப்பாறுவோம். Koñjanêram uṭkârndu iḷaippârruvôm.	Let us sit awhile to rest ourselves.
நாம் வெளியே உட்கார்ந்திருக்கலாம் வா. Nâm veḷiyê uṭkârndirukkalâm vâ.	Come let us sit awhile outside.
அவன் புல்லின்மேல் உட்கார்ந்தான். Avan pullinmêl uṭkârndân.	He sat on the grass.
நேற்றிராத்திரி கடைத்தெருவில் ஒரு சண்டையானது. Nêṯṯirâttiri kaḍaitteruvil oru saṇḍaiyânadu.	There was a fight in the bazaar last night.
அவன் அநேக அடிப்பட்டான். Avan anêga aḍippaṭân.	He was beaten much.
அவன் முகத்தில் காயப்பட்டது. Avan mugattil gâyappaṭadu.	He was wounded on the face.
இந்த விஷயத்தில் அவன் உனக்கு உபத்திரஞ்செய்யவில்லை. Inda vishayattil avan unakku ubattiraññçeyavillai.	He did you no harm in this matter.
நான் இன்று ஒன்றுஞ் சாப்பிடவில்லை. Nân inrru onruñj sâppiḍavillai.	I have eaten nothing to-day.
அதைச்சாப்பிடச் சங்கோசப்படுகிறாயா ? Adaiççâppiḍaç çangôsappaḍugirâyâ ?	Do you make scruple to eat that ?
அது உன்னிஷ்டப்பிரகாரம் செய்திருக்கிறது. Adu unnishṭappiragâram seydirukkirradu.	It is done as you wish.

PART II.

Contains 34 Lessons on special subjects in the form of conversation.

Lesson I.—*On Breakfast.*

காலை போஜன முஸ்தீப்பை ஆயத்தம் பண்ணு. Kâlai bôjana mustîppai âyattum paṇṇu.	Get the breakfast equipage ready.
கொஞ்சம் ரொட்டியை நெருப்பில் சுட்டு செம்மையாய் வெண்ணெய்தடவு. Koñjam roṭiyai neruppil suṭu semmaiyây veṇṇaitaḍavu.	Toast some bread, and butter it properly.
தண்ணீர் கொதிக்கிறதா ? Taṇṇîr kodikkirradâ ?	Does the water boil ?
அந்தத் துரைக்கு இன்னொரு கோப்பை தேத்தண்ணீர் கொடு. Andat duraikku innoru kôppai têttaṇṇîr koḍu.	Give that gentleman another cup of tea.
அதைப் பலமாய்க் காய்ச்சி அதிக பாலும் சர்க்கரையும் போடு. Adaip balamâik kâiççi adiga pâlum sarkkaraiyum pôḍu.	Make it strong, and put plenty of milk and sugar.
எனக்கு ஒரு கோப்பைக் காப்பித்தண்ணீரும் இன்னம் கொஞ்சம் சர்க்கரையும் கொடு. Enakku oru kôppaik kâppittaṇṇîrum innam koñjam sarkkaraiyum koḍu.	Give me a cup of coffee and a little more sugar.
சில முட்டைகளை அவி ஆனால் அவைகள் கெட்டியாகவிடாதே. Sila muṭaigaḷai avi ânâl avaigaḷ keṭiyagaviḍâdê.	Boil some eggs, but do not let them get hard.

முட்டைக் கோப்பைகள், உப்பு பாத்திரங்கள் அப்பக்கமும், டீ காப்பி பாத்திரங்களிப்பக்கமும் வை. Muṭaik kôppaigaḷ, uppu pâttirangaḷ appakkamum, ṭî kâppi pâttiranga ḷippakkamum vai.	Set the egg-cups and salt-cellar on that side and the tea and coffee pots on this side.
ரொட்டி, பிஸ்கோத்து, மிட்டாய், கேக் முதலியவைகளைக் கொண்டுவா ? Roṭi, biskôttu, miṭây, kêk mudaliya vaigaḷaik koṇḍuvâ ?	Bring bread, biscuit, sweetmeats, cake, &c.
நான் பாலேடில்லாமல் தேமேசை சாப்பிடுகிறதில்லையென்று உனக்குத் தெரியுமே. Nân pâlêḍillâmal têmêsai sâppiḍu-girradillaiyenrru unakkut teriyu-mê.	You know I cannot drink tea without cream.
ரொட்டி பதனற்றதாயும் மணலுள்ளதாயும் இருக்கிறது. Roṭi patanattatâyum maṇaluḷḷatâ-yum irukkirradu.	The bread is very bad and full of sand.
இந்தத் தேத்தண்ணீர் செய்தஜலம் கொதிக்கவில்லை, அது உரிசியாகவே இல்லை. Indat têttaṇṇîr seyda jalam kotikka-villai, adu urisiyâgavê illai.	The water with which this tea is made has not been boiling, it has no taste at all.

Lesson II.—*On Dinner.*

மூன்றுமணிக்குப் பகல்போஜனம் ஆயத்தம்பண்ணும்படி சமையற்காரனுக்குச் சொல்லு. Mûnrru maṇikkup pagalbôjanam âyattampaṇṇumbaḍi samaiyarrkâ-ranukkuç çollu.	Tell the cook to have the dinner ready at three o'clock.
ஐயா பகல்போஜனம் ஆயத்தமா யிருக்கிறது. Aiyâ pagalbôjanam âyattamâ yiruk-kirradu.	Sir, dinner is ready.
சூப்பும் சூப்பு கரண்டியும் எங்கே ? Sûppum sûppu karraṇḍiyum engê ?	Where is the soup, and the soup-ladle ?

ஒரு சுடுதண்ணீர்ப்பீங்கானும், கொஞ்சம் ரொட்டியும், உருளைக்கிழங்கும், கீரையும், கோவிசும், டற்நாப்சும், காறட்கிழங்கும், வெள்ளரிக்காய்களும் கொண்டுவா.
Oru suḍutaṇṇîrppîngânum, koñjam roṭiyum, uruḷaikkiṛangum, kîraiyum, kôvisum, ṭrrnâpsum, kârratkiṛangum, veḷḷarikkâygaḷum koṇḍuvâ.
Bring a hot water plate, some bread, potatoes, greens, cabbage, turnips, carrots and cucumbers.

அந்த மரக்கறிபதார்த்தத்துக்குப் பேர் என்ன ?
Anda marakkarri padârttattukkup-pêr enna ?
What do you call that vegetable ?

கொஞ்சம் மாட்டிறைச்சியும், ஆட்டிறைச்சியும், கன்றிறைச்சியும், மீனும், கோழியும், மானிறைச்சியும் கொண்டுவா.
Koñjam mâṭirraiççiyum, âṭirraiççiyum, kanrrirraiççiyum, mînum, kôṛiyum, mânirraiççiyum koṇḍuvâ.
Bring some beef, mutton, veal, fish, fowl and venison.

தமிழ்க்கறி பதார்த்தங்கள் நன்றாய்ச் செய்வாயா ?
Tamiṛkkarri padârttangaḷ nanrrâyç seyvâyâ ?
Can you dress Native dishes well ?

இது என்ன கனிகளின் காலம் ?
Idu enna kanigaḷin kâlam ?
What fruits are in season now ?

ஒவ்வொரு வகையில் கொஞ்சம் கொண்டுவா.
Ovvoru vagaiyil koñjam koṇḍuvâ.
Bring some of each sort.

நாளைக்கு நாம் வனபோஜனம் பண்ணுவோம் சரியான வேளையில் எல்லா சாமான்களையும் அனுப்பிவிடு.
Nâḷaikku nâm vanabôjanam paṇṇuvôm, sariyâna vêḷaiyil ellâ sâmângaḷaiyum anuppiviḍu.
To-morrow we shall enjoy the picnic, send everything in time.

இக்காலத்தில் அந்த இறைச்சி அவ்வளவு நேரம் இருக்குமா ?
Ikkâlattil anda irraiççi avvaḷavu nêram irukkumâ ?
Will this meat keep so long in this weather ?

இப்போது நீங்கள் எல்லாரும் போய்விடலாம், உங்களுக்கு உத்திரவுண்டு. Ippôdu nîngaḷ ellârum pôyviḍalâm, ungaḷukku uttiravunḍu.	Now you may all depart, you have leave.

LESSON III.—*On Calling, Speaking, &c.*

இதின் பேர் என்ன? Idin pêr enna?	What is the name of this?
இதை என்னவென்று அழைக்கிறீர்கள்? Idai ennavenrru aṛaikkirrîrgaḷ?	What do you call this thing?
அதற்குத் தமிழில் பேர் என்ன? Adarrkut tamiṛil pêr enna?	What do you call that in Tamil?
இன்ன துரை எங்கே இருக்கிறாரென்று சொல்லுவாயா? Inna durai engê irukkirrârenrru solluvâyâ?	Can you tell me where Mr. ——— lives?
உன் சொந்தபாஷையில் இதின் பேரென்னவென்று எனக்குச்சொல்லு. Un sonda bâshaiyil idin pêrennavenrru enakkuççollu.	Tell me the name of this in your own language.
நான் அப்புத்தகத்தைக்குறித்து உனக்குச்சொன்னதை ஒருவருக்கும் தெரிவிக்காதே. Nân apputtagattaikkurrittu unakkuççonnadai oruvarrukkum terrivikkâdê.	Do not tell any one what I said to you about that book.
அவர்கள் தங்களுக்குள் இங்கிலீஷிலும் நம்முடன் தமிழிலும் பேசுகிறார்கள். Avargaḷ tangaḷukkuḷ Ingilîshilum nammuḍân Tamiṛilum pêsugirrârgaḷ.	They speak English among themselves and Tamil with us.
அவனை இங்கே வரச்சொல்லு. Avanai ingê varaççollu.	Bid him come here.
என் வேலைக்காரன் நான் சொல்லுகிறதைச்சட்டைபண்ணுகிறதில்லை. En vêlaikkâran nân sollugirradaiç çaṭaipaṇṇugirradillai.	My servant does not mind what I say to him.
அவன் பெரிய கள்ளனென்று அவனுக்குச்சொல்லு. Avan perriya kaḷḷanenrru avanukkuççollu.	Tell him he is a great rogue.

நான் தமிழ்ப்பேசக்கூடுமானால் சந்தோஷமாய்ப் பேசுவேன், ஆனால் அப்பாஷையில் இரண்டு வாக்கியங்களை ஒன்றாய் இணைக்க என்னால் கூடாது. Nân tamiṛppêsakkûḍumânâl sandôshamâyp pêsuvên, ânâl appâshaiyil iraṇḍu vâkkiyangaḷai onrrây iṇaikka ennâl kûḍâdu.	Could I speak Tamil, I would do it with pleasure; but, alas! I cannot combine two sentences together in that tongue.
இன்னம் சில மாதங்களுக்குள் நீர் அதைப் பேசலாம், மேலும் நன்றாய்ப் பேசக்கூடியவர்களோடெல்லாம் நீர் அதைப்பேசி அப்பியாசப்படுத்தவேண்டும். Innam sila mâdangaḷukkuḷ nîr adaipêsalâm, mêlum nanrrâip pêsakkûḍiyavargaḷôḍellâm nîr adai pêsi appiyâsappaḍuttavêṇḍum.	You will be able to speak it in a few months, and you ought to practise speaking it with every one who is able to tell you how to speak it well.

Lesson IV.—*On Visiting.*

பல்லாக்கை என் அருகில் கொண்டுவா. Pallâkkai en arugil koṇḍuvâ.	Bring the pâlki near me.
அந்தத் துரை வீட்டுக்கு என்னைக் கொண்டுபோ. Andat durai vîṭukku ennaik koṇḍupô.	Take me to Mr.——'s.
பல்லாக்கைக் கதவினோரமாய்க்கொண்டுவா. Pallâkkaik kadavinôramâik koṇḍuvâ.	Bring the pâlki close to the door.
உன்னால் கூடிய துரிதத்தோடு போ. Unnâl kûḍiya turidattôḍu pô.	Go as fast as you can.
துரை வெளியே போயிருக்கிறாரா வென்றும், எப்போது வருவாரென்றும் விசாரி. Durai veḷiyê pôyirukkirrârâ venrrum, eppôdu varuvârenrrum visâri.	Ask if the gentleman has gone out, and when he will return.
உன் எசமானுக்கு என் வந்தனம் சொல். Un ejamânukku en vandanam sol.	Give my compliments to your master.
அந்தத் துரை வரும்போது இந்தச் சீட்டை அவருக்குக் கொடு. Andat durai varumbôdu indaç çîṭai avarukkuk koḍu.	Give this note to Mr. —— when he returns.

நீ அந்தத் துரை வீட்டின்வழி தப்பிப் போனாய், இந்தப்பாதையல்ல. Nî andat durai vîṭinvaṛi tappip pônay, indappâdaiyalla.	You have lost the road to Mr. ——'s house; this is not the way.
பல்லாக்கைத் தாழ வை. Pallâkkait tâṛa vai.	Place the pâlki down.
நில், நான் இந்த ஷாப்புக்குப்போகிறேன். Nil, nân inda shâppukkuppôgirrên.	Stop, I am going to this shop.
இந்தப் புத்தகத்தின் விலை என்ன ? Indap puttagattin vilai enna ?	What is the price of this book ?
நான் அவ்வளவு கொடுக்கமாட்டேன். Nân avvaḷavu koḍukkamâṭên.	I will not give so much.
நீ கேட்கிற விலையில் பாதிகூட நான் கொடுக்கமாட்டேன். Nî kêṭkirra vilaiyil pâdikûḍa nân koḍukkamâṭên.	I won't give even half the price you fix.
எனக்கு அப்புத்தகம் தேவையில்லை, ஆனால் நீ நயமாய்க் கொடுத்தால் நான் ஒருவேளை வாங்குவேன். Enakku apputtagam têvaiyillai, ânâl nî nayamâyk koḍuttâl nân oruvêḷai vânguvên.	I do not want the book, but if you give it cheap, I may purchase it.
என்னிடத்தில் பணமில்லை, ஆனால் நீ யென்னோடுகூட வந்தால் உன் பணத்தை என் வீட்டில் வாங்கிக்கொள்ளலாம். Ennidattil paṇamillai, ânâl nî yennôḍukûḍa vandâl un paṇattai en vîṭil vângikkoḷḷalâm.	I have no cash with me, but if you will follow me, you will receive your money at my house.
புத்தகத்தை உன்னோடே கொண்டுவந்து அதின் விலையை வாங்கிக்கொள். Puttagattai unnôḍê konḍuvandu adin vilaiyai vângikkoḷ.	Bring the book with you, and then take its price.

Lesson V.—*On Riding.*

குதிரை தயாராயிருக்கிறதா ? Kudirai tayârâyirukkirradâ ?	Is the horse ready ?
அதற்குச் சேணம் போடு. Adarrkuç çêṇam pôḍu.	Put the saddle on.

நான் சரியாய் ஏறுமளவும் கடிவாளத்தைப் பிடித்துக்கொள். Nân sariyây êrrumaḷavum kaḍivâḷattaip piḍittukkoḷ.	Hold the bridle till I be fairly mounted.
அங்குபடியை ஒரு துவாரம் உயர்த்து. Angupaḍiyai oru tuvâram uyarttu.	Take up the stirrup one hole.
கடிவாளவார் பலமாயிருக்கவும் அடிக்கடி பழுது பார்க்கப்படவும் பார்த்துக் கொள். Kaḍivâḷavâr balamâyirukkavum aḍikkaḍi paṛudu pârkkappaḍavum pârttukkoḷ.	See that the reins are strong, and are kept in constant repair.
இங்கே, குதிரைக்காரா குதிரையைப் பிடி நான் கொஞ்சம் இறங்கவேண்டும். Ingê kudiraikkârâ kudiraiyaippiḍi nân koñjam irrangavêṇḍum.	Here, you groom, hold the horse, I must dismount for a little.
பத்திரம் உன்கையிலிருந்து பிடுங்கிக் கொள்ளும். Pattiram unkaiyilirundu piḍungikkoḷḷum.	Take care, he will get out of your hands.
அது குதிரைபோவதற்கேற்ற நிலமாவென்று பார். Adu kudiraipôvadarrkêtt nilamâvenrru pâr.	See if that ground is proper for the horse to go over.
அந்த இடத்தை நன்றாய்ப் பரிசோதித்து ஜலம் எவ்வளவுதூரம் வருகிறதென்று பார். Anda iḍattai nanrrâyp parisôdittu jalam evvaḷavudûram varugirradenrru pâr.	Examine the place carefully, and see how far the water comes up.
இப்போது குதிரை மிகவும் காங்கையாய் இருப்பதால் தண்ணீர் காட்டாதே. Ippôdu kudirai migavum kânggaiyây yiruppadâl taṇṇîr kâṭâdê.	Do not give the horse water now, whilst he is so very warm.
இது வழிப்பிரயாணத்துக்கேற்ற சாதுவான குதிரையா? Idu vaṛippirayâṇattukkêtta sâduvâna kudiraiyâ ?	Is this a quiet horse for the journey ?
அது வெடியலுக்கு நிற்குமா ? Adu veḍiyalukku nirrkumâ ?	Does he stand fire ?

Lesson VI.—*On Sporting.*

இதற்கருகில் வேட்டைக்குத்தகுந்த மிருகங்கள் உண்டா? Idarrkarugil vêṭaikkuttagunda mirugangaḷ uṇḍâ?	Is there much game in this neighbourhood?
குருவி துப்பாக்கிகளைச்சுத்தம் பண்ணு, பெரிய துப்பாக்கிகள் சுட சிலகுண்டுகளும் போட்டுவை. Kuruvi tuppâkkigaḷaiççuttam paṇṇu, periya tuppâkkigaḷ suḍa sila kuṇḍugaḷum pôṭuvai.	Clean all the fowling pieces well, and put up a few bullets also for the large guns.
வேட்டைமிருகங்கள் இருக்கும் இடத்தைக் காண்பிக்கும்படி ஊரார்களில் சிலரைக்கூப்பிடு. Vêṭaimirugangaḷ irukkum iḍattaik kâṇbikkumbaḍi ûrârgaḷil silaraik kûppiḍu.	Call some of the villagers to show the usual haunts of the game.
அந்தச் சிருகாட்டுக்கந்தண்டை இரண்டுகாட்டெருமைகள் இருக்கின்றன. நீ இடதுபுறத்திலிருப்பதைச் சுடு, நான் மற்றொன்றைத்தொடர்வேன். Andaç çirukâṭukkandaṇḍai iraṇḍu kâṭerumaigaḷ irukkinrrana, nî iḍadupurrattiliruppadaiç çuḍu, nân maṯṯonraittoḍarvên.	Behind that copse there are two wild buffaloes. You fire at the one towards the left, I shall take the other.
நீ குறி பார்த்து அடித்தாய், ஆனால் நான் தப்பிப்போனேன். Nî kurri pârttu aḍittây, ânâl nân tappippônên.	You have hit the mark, but I have missed it.
நீ எத்தனை உள்ளான்குருவிகள் சுட்டாய்? Nî ettanai uḷḷânkuruvigaḷ suṭây?	How many snipes have you killed?
இங்கே வேட்டைமிருகங்களாவது மாமிசபக்ஷண மிருகங்களாவது இருக்கின்றனவென்று நினைக்கிறாயா? Ingê vêṭaimirugangaḷâvadu mâmiçapaḍççana mirugangaḷâvadu irukkinrranavenrru ninaikkirrâyâ?	Do you think there is any game here, or any beast of prey?
ஜனங்களை உன்னோடு அழைத்துப்போய்ப்புதர்களை யெல்லாம் நன்றாய் அடி. Janangaḷai unnôḍu aṛaittuppôyp pudargaḷai yellâm nanrrây aḍi.	Take the people with you, and beat all the bushes well.

அடுத்திரு அந்தப்புதரினருகில் ஓர் புலியைக் காண்கிறேன். Aḍuttiru andappudarinarugil ôr puliyaik kâṇgirên.	Keep close there. I see a tiger near that bush.
நன்றாய்க் குறிபார்த்துப் புலியின் தலையை நோக்கிச்சுடு இல்லாவிட்டால் நாமெல்லோரும் மடிவோம். Nanrrâyk kurripârttup puliyin talaiyainôkkiççuḍu illâviṭâl nâmellôrum maḍivôm.	Take a good aim, and lodge the ball in the tiger's head otherwise we are all dead men.

Lesson VII.—*On Travelling.*

இப்பட்டணத்திலிருந்து டெல்லிக்கு எத்தனை மஜில்? Ippaṭaṇattilirundu ḍellikku ettanai majil?	How many stages is Delhi from this town?
உன் படகு தயாராயிருக்கிறதா? Un paḍagu tayârâyirukkirradâ?	Is your boat ready?
உம்முடைய ஜனங்களெல்லாரும் காசியாத்திரை பண்ணத் தயாராயிருக்கிறார்களா? Ummuḍaiya janangaḷellârum kâsiyâttirai paṇṇat tayârâyirukkirrârgaḷâ?	Are all your people ready to go on a voyage to Benares?
இப்படகுக்கு இரண்டு மாதத்துக்குச் சத்தமென்ன? Ippaḍagukku iraṇḍu mâdattukkuç çattamenna?	What is the hire of this boat for two months?
இன்றைக்கு நதியின்மேல்போக நீரோட்டம் எத்தனைமணிக்கு உதவும். Inrraikku nadiyinmêlpôga nîrôṭam ettanaimaṇikku udavum.	At which hour does the tide serve to go up the river to-day?
ஜலத்தின்மேல் போகிறதைப்பார்க்கிலும் கரைவழியாய்ப்போக எனக்கு விருப்பமுண்டு. Jalattinmêl pôgirradaippârkkilum karaivaṛiyâyppôga enakku viruppamuṇḍu.	I prefer going by land, to going by water.

படகுக்காரா நீ யாருடைய வேலையில் இருக்கிறாய், நீ கல்கத்தாவுக்கு எப்போது போய்ச்சேருவாய்? Paḍagukkârâ nî yâruḍaiya vêlaiyil irukkirrây, nî kalkattâvukku eppôdu pôyççêruvây?	Boatman, in whose service are you; and when will you reach Calcutta?
இன்னம் எத்தனை படகுக்காரர்கள் உன்னோடு இருக்கிறார்கள்? Innam ettanai paḍagukkârargaḷ unnôḍu irukkirrârgaḷ?	How many other boatmen are with you?
அவர்கள் எல்லாரும் உன் ஊராரா அல்லது உன்பந்துஜனங்களா? Avargaḷ ellârum un ûrârâ alladu unbaudujanangaḷâ?	Are they all your countrymen, or your relations?
இங்கே இருக்கிற படகுக்காரர்களில் எக்கூட்டத்தார் அதிக சம்பாதனைக்காரர்கள்? Ingê irukkirra paḍagukkârargalil ekkûṭattâr adiga sambâdanaikkârargaḷ?	What tribe of boatmen here make more money than the rest?

Lesson VIII.—*With a Mûnshi.*

நீ எனக்குத் தமிழ் கற்றுக்கொடுக்கக் கூடுமா? Nî enakkut tamiṟ kaṯṯukkoḍukkak kûḍumâ?	Can you teach me Tamil?
அதற்கு மிகுந்த உபயோகமான புத்தகங்கள் எவை? Adarrku migunda ubayôgamâna puttagangaḷ evai?	What are the best books for it?
தப்பிதமாய் உச்சரிக்க விடாதே. Tappidamây uççarikka viḍâdê.	Do not allow me to pronounce badly.
அவ்வளவு கடினமான வார்த்தைகளை வழங்காதே. Avvaḷavu kaḍinamâna vârttaigaḷai vaṟangâdê.	Do not use such hard words.
இது சரியோ அல்லவோ? Idu sariyô allavô?	Is this correct or not?

ஐயா உம்முடைய அபிப்பிராயத்தில் தமிழோ தெலுங்கோ எது படிக்கிறதற்கு வருத்தமானது தயவுசெய்து சொல்லும் ? Aiyâ ummuḍaiya abippirâyattil tamiṛô telungô edu paḍikkirradarrku varuttamânadu dayavuseydu sollum ?	Pray sir, in your opinion, whether Tamil or Telugu is more difficult to learn ?
தமிழ் கடினமென்பதற்கு சந்தேகமில்லை, ஆனால் தெலுங்கும் படிக்கிறதற்கு ப்பிரயோசனமான பாஷைதான். Tamiṛ kaḍinamenbadarrku sandêgamillai, ânâl telungum paḍikkirradarrkup pirayôsanamâna pâshaidân.	As to the difficulty of Tamil there can be no doubt; but Telugu is as useful a language to learn.
நாங்கள் அதைப் படிக்கப் பிரயாசைப் படுகிறோம் நீர் கற்றுக்கொடுப்பீரா ? Nângal adaip paḍikkap pirayâsaippaḍugirrôm nîr kaṯṯukkoḍuppîrâ ?	We will strive to learn it; can you teach us ?
தென் இந்தியா முழுதிலும் உயர்ந்தவர்களோடும் தாழ்ந்தவர்களோடும் எவ்வித வேலைக்கும் தமிழ் அவசியமானதா ? Ten India muṛudilum uyarndavargaḷôḍum târṇdavargaḷôḍum evvida vêlaikkum tamiṛ avasiyamânada ?	Is Tamil a requisite language for transactions of all sorts, with both the high and the low throughout Southern India ?
தமிழ்ப் பாஷையைக் கற்றுக்கொள்ளும் படி உம்முடைய யோசனையென்ன ? Tamiṛp pâshaiyaik kaṯṯukkoḷḷum paḍi ummuḍaiya yôçanai yenna ?	What is your advice for acquiring the Tamil tongue ?
நான் கற்றுக்கொண்டு உமக்கு எப்போதும் நன்றியறிதலுள்ளவனா யிருக்கும் படிக்கு உன் மனதைத் திறந்து சொல்லும். Nân kaṯṯukkoṇdu umakku eppôdum nanrriyarridaluḷḷavanâ yirukkum baḍikku un manadait tirrandu sollum.	Speak candidly, that I may learn the language accordingly, and remain eternally obliged to you on that account.

Lesson IX.—*With a Native Officer.*

சாயங்காலந்தோறும் புதுச்சிப்பாய்கள் பட்டு சுடப் போகவேண்டும். Sâyangâlandôrrum puduççipâygaḷ baṭu suḍap pôgavêṇḍum.	The recruits must go to ball practice every evening.

நாளை காலமே ஆயுதங்கள் சோதிக்கப்படும் ஆதலால் அவைகளெல்லாம் அழுக்கில்லாமல் பார். Nâḷai kâlamê âyudangaḷ sôdikkappaḍum âdalâl avaigaḷellâm aṛukkillâmal pâr.	There will be an inspection of arms to-morrow morning. See that they are all very clean.
மிச்சமாயிருக்கப்பட்ட ஆயுதங்களைத் தினந்தோறும் சுத்தி பண்ணப்படும்படி பார். Miççamâyirukkappaṭṭa âyudangaḷait tinandôrrum çutti paṇṇappaḍumbaḍi pâr.	Take care that the supernumerary arms are cleaned every day.
தினந்தோறும் எனக்குக் கம்பெனியைப் பற்றி எழுதின ரிபோர்ட்டுக் கொண்டு வா. Dinandôrrum enakkuk kampeniyaip paṯṯi eṛudina ripôrṭuk koṇḍuvâ.	Bring me a written report of the Company daily.
இந்த மனிதன் எப்போது சேவகத்தில் தாக்கலானான் ? Inda manidan eppôdu sêvagattil dâkkalânân ?	When was this man enlisted in service ?
கம்பெனி மூன்று பிரிவாகும்படி சொல். Kampeni mûnrru pirivâgumpaḍi sol.	Order the Company into three sections.
நாளை காலமே எத்தனை மணிக்குச் சேனை புறப்படும் ? Nâḷai kâlamê ettani maṇikkuç çênai purrappaḍum ?	At what time will the Battalion march to-morrow morning ?
இன்று இரவில் ரோந்துக்கு எத்தனை பேர் நியமிக்கப்பட்டார்கள் ? Inrru iravil rôndukku ettanai pêr niyamikkappaṭârgaḷ ?	How many men are for piquet to-night ?
நீர் எந்தப் பட்டாளத்தைச் சேர்ந்தவர் தயவுசெய்து சொல்லும் ? Nîr endap paṭalattaiç çêrndavar dayavuseydu sollum ?	Pray, Sir, to what Regiment do you belong ?
உம்முடைய முழுப்படையும் இவ்விடத்தில் சேவகம் பண்ணுகிறதா அல்லது வேறே எங்கேயாகிலும் இருக்கிறதா ? Ummuḍaiya muṛuppaḍaiyum ivviḍattil sêvagam paṇṇugirradâ alladu vêrrê engêyâgilum irukkirradâ ?	Is your whole Regiment on duty here, or elsewhere ?

உம்முடைய ராங்க் என்ன, நீர் கத்திகட்டி யாகி எவ்வளவு காலமாயிற்று ? Ummuḍaiya rânk enna, nîr katti- kaṭiyâgi evvaḷavu kâlamâyiṯṯu ?	What rank do you hold, and how long have you been an officer ?
உம்முடைய சம்பளம் என்ன, நீர் அதை மாதந்தோறும் முழுமையும் வாங்குகி றீரா இல்லையா ? Ummuḍaiya sambaḷam enna, nîr adai mâdandôrrum muṛumaiyum vân- gugirrîrâ illaiyâ ?	What is your pay, and do you receive the whole monthly or not ?
நான் சொன்ன தெல்லாவற்றையும் நன் றாய் அறிந்துகொண்டீரா இல்லையா ? Nân sonna dellâvaṯṯaiyum nanrrây arrindukoṇḍîrâ illaiyâ ?	Have you clearly understood all that I have said, or not ?
எனக்கு உத்தரவு கொடுக்கும்படி ஐயப் படாதேயும், ஒளிக்காமல் உமக்கு இ ஷ்டமானதையெல்லாம் பேசும். Enakku uttaravu koḍukkumbaḍi aiyappaḍâdêyum, oḷikkâmal umak- ku ishṭamânadaiyellâm pêsum.	Be not in the least apprehensive in answering me ; speak whatever you please without reserve.

Lesson X.—*Military Instructions.*

துப்பாக்கியால் வந்தனம் செய். Tuppâkkiyâl vandanam sey.	Present arms.
துப்பாக்கியை தோளுக்கு நேராய் வை. Tuppâkkiyai tôḷukku nêrây vai.	Shoulder arms.
துப்பாக்கியை சாய்வாய் பிடி. Tuppâkkiyai sâyvây piḍi.	Port arms.
சனியனால் குத்து. Saniyanâl kuttu.	Charge bayonets.
துப்பாக்கியை கீழ் இரக்கு. Tuppâkkiyai kîṛ irakku.	Order arms.
வலங்கை துப்பாக்கியை சாய்வாய் எடு. Valangkai tuppâkkiyai sâyvây eḍu.	Slope arms.
துப்பாக்கியை குறுக்காய்ப்பிடி. Tuppâkkiyai kurrukkâyppiḍi.	Trail arms.
துப்பாக்கியை முதுகில் மாட்டிக்கொள். Tuppâkkiyai mudugil mâṭikkoḷ.	Sling arms.

துப்பாக்கியை எதிராய்ப்பிடி. Tuppâkkiyai edirâyppiḍi.	Recover arms.
துப்பாக்கிகளைக் கோர்த்துக்கட்டு. Tuppâkkigaḷaik kôrttukkaṭu.	Pile arms.
துப்பாக்கியை பரிக்ஷி. Tuppâkkiyai pariṭçi.	Examine arms.
சனியனை மாட்டு. Saniyanai mâṭu.	Fix bayonets.
சனியனை எடுத்துவிடு. Saniyanai eḍuttuviḍu.	Unfix bayonets.
துப்பாக்கியால் குத்த சித்தமாயிரு. Tuppâkkiyâl kutta sittamâyiru.	Charge bayonets.
நிர்பந்தமில்லாமல் நில். Nirbandamillâmal nil.	Stand at ease.
சீக்கிரம் போ (நட). Sîkkiram pô (naḍa).	Quick march.
மெதுவாய் நட. Meduvây naḍa.	Slow march.
நில். Nil.	Halt.
கத்தியை ஏத்து. Kattiyai êttu.	Fix swords.
கத்தியால் குத்த சித்தமாயிரு. Kattiyâl kutta sittamâyiru.	Charge swords.
கத்தியை கழற்று. Kattiyai kaṛaṯṯu.	Unfix swords.
இடம்விட்டு நில். Iḍam viṭu nil.	Stand clear.
கவனமாய் நில். Gavanamây nil.	Attention.
சுடுவதை நிறுத்து. Suḍuvadai nirruttu.	Cease fire.
முன் பிரிவு. Mun pirivu.	Front rank.
பின் பிரிவு. Pin pirivu.	Rear rank.
இரண்டு பிரிவும். Iraṇḍu pirivum.	Both ranks.

தயாராய் யிரு. Tayârây yiru.	Ready.
ஆரம்பி, துவக்கு. Ârambi, tuvakku.	Commence.
உட்கார்ந்திருக்கும் வரிசை தயாராய் யிரு. Uṭkârrndirukkum varisai tayârây yiru.	Kneeling rank ready.
பின்னே போ. Pinnê pô.	Retire.
இராஜ வந்தனம். Irâja vandanam.	Royal salute.
துப்பாக்கியை கீழே குத்த எடு. Tuppâkkiyai kîṟê kutta eḍu.	Low guard.
துப்பாக்கியை மேலே குத்த எடு. Tuppâkkiyai mêlê kutta edu.	High guard.
துப்பாக்கியால் மாரில் குத்த எடு. Tuppâkkiyâl mâril kutta edu.	Shorten arms.
அரை குதிரைக்கி நிறுத்து. Arai kudiraikki nirruttu.	Half cock arms.
குத்து. Kuttu.	Point.
முன்வரிசைகுத்த தயாராய் யிரு. Munvarisaikuṯṯa tayârây yiru.	Front rank prepare to charge.
பின்வரிசை குத்த தயாராய் யிரு. Pinvarisai kutta tayârây yiru.	Rear rank prepare to charge.
நெருங்கிப் போ. Nerungip pô.	Close order march.
குதிரையை ஒருபடிகட்டில் இரக்கு. Kudiraiyai orupaḍikaṭil irakku.	Half cock arms.

Lesson XI.—*With a Head Servant.*

உனக்கு எங்கள் பாஷை தெரியுமா? Unakku engaḷ bâshai teriyumâ?	Do you know our language?
ஆம், ஐயா, நான் கொஞ்சம் இங்கிலீஷ் பேசுவேன். Âm, aiyâ, nân koñjam Ingilîsh pêsuvên.	Yes, Sir, I can speak a little English.

நான் இன்னம் தமிழில் இலக்கண விதியாய்ப்பேச கற்றுக்கொள்ளவில்லை. Nân innam tamiṛil ilakkaṇa vidiyâyppêsa kaṯṯukkoḷḷavillai.	I have not yet learned to speak Tamil grammatically.
நீ இப்போது எங்கே வாசம் பண்ணுகிறாய்? Nî ippôdu engê vâsam paṇṇugirrây?	Where do you now live?
தயவுசெய்து உன் பேரையும், உன் எசமான் பேரையும் சொல்லு. Dayavuseydu un pêraiyum, un ejamân pêraiyum sollu.	Pray what is your name? Let me know also your master's name.
நீ அந்தத் துரையிடத்தில் எத்தனைகாலமாயிருக்கிறாய்? Nî andat duraiyiḍattil ettanaikâlamâ yirukkirrây?	How long have you been in that gentleman's service?
உன் சுதேசம் எது, அது இங்கிருந்து எவ்வளவு தூரமிருக்கும்? Un sudêsam edu, adu ingirundu evvaḷavu dûramirukkum?	Which is your native country, and how far may it be hence?
சாதாரணமாய் ஜனங்கள் அதற்கு கரைவழியாய்ப் போகிறார்களா அல்லது நீர்வழியாய்ப் போகிறார்களா? Sâdâraṇamây janangaḷ adarrku karaivaṛiyâyp pôgirrârgaḷâ alladu nîrvaṛiyâyp pôgirrârgaḷâ?	Do people in general go there by land or water?
அத்தேசத்தில் வர்த்தகத்துக்குரிய விசேஷித்த சரக்குகள் என்ன, அன்றியும் அங்கே மிகுதியாய் விளைகிற பதார்த்தங்கள் எவை? Attêsattil varttagattukkuriya visêshitta sarakkugaḷ enna, anrriyum angê migudiyây viḷaigirra padârttangaḷ evai?	What is the most important article of trade in that country, and what things are produced in greatest abundance there?
உன் தாய்தந்தைகள் உயிரோடிருக்கிறார்களா, நீ உன் பந்துக்கள் சிநேகிதர்களை எப்போதாகிலும் பார்க்கப்போகிறாயா? Un tâytandaigaḷ uyirôdirukkirrârgaḷâ, nî un bandukkaḷ sinêgidargaḷai eppôdâgilum pârkkappôgirrâyâ?	Are your parents alive or not, and do you ever go to see your relations and friends?

இங்குள்ள பஜாரில் செம்பு எப்படி விற்கிறதென்று உனக்குத்தெரியுமா ? Ingul̤l̤a bajâril sembu eppaḍi virrkirradenrru unakkutteriyumâ ?	Do you know at what rate copper sells in the bazaar here ?
பட்டணத்துக்குள் ஒருபடி பாலுக் கென்ன விலை, உள்ளூரில் என்னவிலை ? Paṭaṇattukkuḷ orupaḍi pâluk kenna vilai, ul̤l̤ûril enna vilai ?	At what rate is a measure of milk sold in the city, and in the country for how much ?
இங்கிலாண்டுக்கு என்ன சரக்குகள் விசேஷமாய் ஏற்றுமதியாகிறது ? Ingilâṇḍukku enna sarakkugaḷ visêshamây êṯṯumadiyâgirradu ?	What articles are chiefly exported to England ?

Lesson XII.—*With a Village Servant.*

நீ ஆர் ? Nî âr ?	Who are you ?
நான் வேலைக்காரன். Nân vêlaikkâran.	I am a servant.
எங்கிருந்து வந்தாய் ? Engirundu vandây ?	Where have you come from ?
நான் ஊரிலிருந்து வந்தேன். Nân ûrilirundu vandên.	I came from the village.
நீ என்ன சாதியான் ? Nî enna sâdiyân ?	Of what caste are you ?
நான் குடியானவன். Nân kuḍiyânavan.	A cultivator.
உனக்குத் தாய் தந்தைச் சகோதரர் உண்டா ? Unakkut tây tandaiç çagôdarar uṇḍâ ?	Have you a mother, father and brothers?
என் தாய் தந்தைகள் விருதாப்பியராயும், என்னிரண்டு இளைய சகோதரர் இன்னம் சிறுவர்களாயு மிருக்கிறார்கள். En tây tandaigaḷ virudâppiyarâyum, ennirandu iḷaiya sagôdarar innam sirruvargaḷâyu mirukkirrârgaḷ.	My father and mother are old, and my two younger brothers are still little ones.

சம்பாதிக்கிறவன் நீ ஒருவன்தானா? Sambâdikkirravan nî oruvandânâ ?	Are you the only one that can earn any thing ?
ஆம் ஐயா, நான் ஒருவனே வேலைசெய்து என் குடும்பத்தை ஆதரிக்கவேண்டும். Âm aiyâ, nân oruvanê vêlaiseydu en kuḍumbattai âdarikkavêṇḍum.	Yes, sir, I alone must work and maintain the family.
உனக்குக் கலியாணமாயிற்றா? Unakkuk kaliyâṇamâyiṯṯâ ?	Are you married ?
எனக்குக் கலியாணமாகி இரண்டு பிள்ளைகளும் உண்டு, ஒரு ஆணும் ஒரு பெண்ணும். Enakkuk kaliyâṇamâgi iraṇḍu piḷḷaigaḷum uṇḍu, oru âṇum oru peṇṇum.	I am married, and have two children, a boy and a girl.
உனக்கு வயதென்ன? Unakku vayadenna ?	How old are you ?
என் வயதைப்பற்றி .யாதொரு கணக்குமில்லாதபடியால் எனக்குத் தெரியாது, ஆனால் ஒரு குறிப்புண்டு, சீரங்கப்பட்டணம் நான் பிறப்பதற்குமுன்னே பிடிக்கப்பட்டதென்று சொல்லுகிறார்கள். En vayadaippaṯṯi yâdoru kaṇakkumillâdapaḍiyâl enakkut teriyâdu, ânâl oru kurrippuṇḍu, Sîrangappaṭaṇam nân pirrappadarrkumunnê piḍikkappaṭadenrru sollugirrârgaḷ.	I cannot say how old I am ; there is no account, sir, but there is a mark ; they say that Seringapatam fell before I was born.
அப்படியானால் நீ நாற்பது வயதுக்கு மேற்பட்டவனா? Appaḍiyânâl nî nârrpadu vayadukku mêrrpaṭavanâ ?	Then, are you over forty ?
ஒருவேளை யிருக்கலாமையா. Oruvêḷai yirukkalâmaiyâ.	May be, sir.
நீ என்னவேலை செய்வாய்? Nî ennavêlai seyvây ?	What work can you do ?
நான் பயிர்வேலையும், தோட்டவேலையும் செய்வேன். Nân payirvêlaiyum, tôṭavêlaiyum seyvên.	I can do farming, and gardening.

Lesson XIII.—*With a Village Servant.*—(continued.)

நீ இன்னம் என்ன செய்யக்கூடும் ? Nî innam enna seyyakkûḍum ?	What else can you do ?
நான் வண்டியும் ஓட்டுவேன், குதிரை வேலையும் பார்ப்பேன். Nân vaṇḍiyum ôṭuvên, kudirai vêlaiyum pârppên.	I can drive carriage and look after a horse.
அப்படியானால் நீ என் வண்டிக்காரனா யிருப்பாயா ? Appaḍiyânâl nî ên vaṇḍikkâranâ yiruppâyâ ?	Then will you be my bandyman ?
அப்படியே யிருப்பேன், என்ன சம்பளம் கொடுப்பீர்களையா ? Appaḍiyê yiruppên, enna sambaḷam koḍuppîrgaḷaiyâ ?	I will; what pay will you give, sir ?
ஐந்து ரூபாய் கொடுப்பேன். Aindu rûbây koḍuppên.	I'll give you five rupees.
அது எனக்குப் போதாதையா. Adu enakkup pôdâdaiyâ.	That sum will not do for me.
அது உனக்கு போதாவிட்டால் ஆறு ரூபாய் கொடுப்பேன், இருக்கிறாயா மாட்டாயா ? சொல். Adu unakku pôdâviṭâl ârru rûbây koḍuppên, irukkirrâyâ mâṭâyâ ? sol.	If that is insufficient I'll give you six rupees. Will you stay or not ? say.
இருக்கிறேன் ஐயா. Irukkirrên aiyâ.	I'll stay, sir.
இதோ ஒரு ரூபாய் வாங்கிக்கொள், இதை உன் சாப்பாட்டுக்கு முன்பணமாகக் கொடுக்கிறேன். Idô oru rûbây vângikkoḷ, idai un sâppâṭukku munpaṇamâgak koḍukirrên.	Here then I give you a rupee in advance for your food, take.
நல்லதையா, கொடுங்கள். Nalladaiyâ, koḍungaḷ.	Very well, sir, give me.

Lesson XIV.—*With a Gardener.*

தோட்டக்காரா, இங்கே வா. Tôṭakkârâ, ingê vâ.	Gardener, come here.
இன்று காலையிலிருந்து என்ன வேலை செய்தாய்? Inrru kâlaiyilirundu enna vêlai seydây ?	What work have you done to-day since morning ?
மற்ற இரண்டுவேலைக்காரரும் வந்திருக்கிறார்களா ? Maṯṯa iraṇḍu vêlaikkârarum vandirukkirrârgaḷâ ?	Have the other two labourers come ?
அவர்கள் இரண்டு பேரும் வந்து தோட்டத்தை ஐந்து கெஜ அகலந் தோண்டினார்கள். Avargaḷ iraṇḍu pêrum vandu tôṭattai aindu geja agalan tôṇḍinârgaḷ.	They have both come and dug the garden 5 yards broad.
புதிதாய் நடப்பட்ட நாற்றுகளுக்குத்தண்ணீர் விட்டாயா ? Pudidây naḍappaṭa nâṯṯugaḷukkut taṇṇîr viṭâyâ ?	Did you water the young trees that were lately planted ?
நாங்கள் செடிகளைச் சுற்றிலும் மாருயரம் சுவரெழுப்பிச் சுவரின்கீழ் வாய்க்கால் பண்ணி ஒவ்வொன்றுக்கு நாலுகுடம் தண்ணீர் விட்டோம். Nângaḷ seḍigaḷaiç çuṯṯilum mâruyaram suvareṛuppiç çuvarin kîṛ vâykkâl paṇṇi ovvonrrukku nâlu kuḍam taṇṇîr viṭôm.	We built a wall breast high round the plants, made a channel under the wall to water them, and put four pots of water to each.
முதல் நட்ட நாற்றுகள் முளைத்ததா ? Mudal naṭa nâṯṯugaḷ muḷaittadâ ?	Have the first plants sprouted well ?
நாற்றுகளெல்லாம் வெளிகிளம்பிப் பெரிய பெரிய இலைவிட்டிருக்கின்றது. Nâṯṯugaḷellâm veḷikiḷambip periya periya iḷaiviṭirukkinrradu.	All the plants have sprouted nicely, and put forth large leaves.
அந்த ஒலிவ மரம் ஏன் மெலிந்து போயிற்று ? Anda oliva maram êu melindu pôyiṯṯu ?	Why is that olive tree stunted ?

அது பூச்சி பிடித்திருக்கிறது. Adu pûççi pidittirukkirradu.	It is infested by insects.
அதின் இலைகளை நன்றாய்ச் சோதித்துப் பூச்சிகளிருந்தால் எடுத்துவிட்டு மண்ணை உதறியாக்கி அதோடு செம்மண்ணும் எருவும் கலந்து தண்ணீர் நிற்கும்படியாய்ப் பாத்திகட்டிக் காய்ந்துபோகாமல் தண்ணீர் விட்டுப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள். Adin ilaigaḷai nanrrâyç çôdittup pûççigaḷirundâl eḍuttuviṭu maṇṇai udarriyâkki adôḍu semmaṇṇum eruvum kalandu taṇṇîr nirrkumbaḍiyâyp pâttikaṭik kâyndupôgâmal taṇṇîr viṭup pattiramâyp pârttukkoḷ.	Examine its leaves well, and if there be any insects, pick them off, and loosen the earth well, mix red earth and manure, make a basin for watering it to prevent its withering, and carefully protect it.
இவ்வூரில் கிடைக்கும் மஹா வாசனைபொருந்திய பூஞ்செடிகளில் சிலதை கொண்டுவந்து பிறுந்தாவுக்கு முன்பாக நடு. Ivvûril kiḍaikkum mahâ vâsanaiporundiya pûñjçeḍigaḷil siladai koṇḍuvandu pirrândâvukku munbâga naḍu.	Get some of the best scented plants of this country and plant them in front of the verandah.
சில ஒட்டு மாங்கனி நாற்றுகள் கொண்டுவந்து தோட்டத்தில் நடு. Sila oṭu mânggani nâṯṯugaḷ koṇḍuvandu tôṭattil naḍu.	Bring some young plants of grafted mangoes and plant them in the garden.

Lesson XV.—*With a Bandyman.*

வண்டிக்காரா, வண்டியைக் கொண்டுவா, மாடுகளுக்குத் தண்ணீர் காட்டினுயா? Vaṇḍíkkârâ, vaṇḍiyaik koṇḍuvâ, mâḍugaḷukkut taṇṇîr kâṭinâyâ ?	Bandyman, bring the cart. Have you watered the bullocks ?
காட்டினேன். Kâṭinên.	I have watered them.
அவைகளுக்கு இந்த குட்டையில் தண்ணீர் காட்டினுயா அல்லது ஏரியில் காட்டினுயா? Avaigaḷukku inda kuṭaiyil taṇṇîr kâṭinâyâ alladu êriyil kâṭinâyâ ?	Did you water them at this pond, or at the tank ?

இந்தக் குட்டையிலே காட்டினேன்.
Indak kuṭaiyilê kâṭinên.

I have watered them at this pond.

குட்டைத் தண்ணீர் கலங்கலா யிருக்கிற
தே, ஏன் அதில் காட்டினாய், ஏன் ஏரி
தண்ணீர் காட்டாமல் போனாய்?
Kuṭait taṇṇîr kalangalâ yirukkirra-
dê, ên adil kâṭinây, ên êri taṇṇîr
kâṭâmal pônây ?

The pond water is muddy; why did you make them drink that water? Why should you not have given them tank water?

இல்லை, ஐயா; குட்டைத் தண்ணீர் நன்றா
யிருக்கிறது. அதிலுள்ள வண்டலெல்
லாம் எடுக்கப்பட்டு புது தண்ணீர் சுரந்
திருக்கிறது.
Illai, aiyâ; kuṭait taṇṇîr nanrrâyiruk-
kirradu. adiluḷḷa vaṇḍalellâm
eḍukkappaṭu pudu taṇṇîr suran-
dirukkirradu.

No, sir; the pond water is good. They have had all the sediment taken out; fresh water has sprung up.

அப்படியானால் மாடுகளை வண்டியில் பூ
ட்டு, குதிரைவண்டியைப் போட்டுக்
கொண்டு வரும்படி கோச்சுமானுடன்
சொல்.
Appaḍiyânâl mâḍugaḷai vaṇḍiyil pû-
ṭu, kudiraivaṇḍiyaip pôṭukkoṇḍu
varumbaḍi kôççumânuḍan sol.

If so, put the bullocks to the cart, and tell the coachman that he may put the horse to the carriage, and bring it.

கோச்சுமான், குதிரை வண்டியைச் சீக்கி
ரம் கொண்டுவா?
Kôççumân, kudirai vaṇḍiyaiç çîkki-
ram koṇḍuvâ ?

Coachman, bring the carriage soon?

வண்டிக்காரா வண்டியின் பெட்டியை
நன்றாய்த் துடைத்து உறை போடு, வே
லைக்காரரைச் சாமான்களை எல்லாம்
கொண்டுவரும்படி செய்.
Vaṇḍikkârâ vaṇḍiyin peṭiyai nan-
rrâyt tuḍaittu urrai pôḍu, vêlaik-
kâraraiç çâmângaḷai ellâm koṇḍu-
varumbaḍi sey.

Bandyman, dust the box well, and put on the cover, get the servants to bring all the luggage.

சாமான்களை எல்லாம் ஒரு பக்கமாய் வை
த்து நான் உட்காரும்படி இடம் விடு.
Sâmângaḷai ellâm oru pakkamây
vaittu nân uṭkârumbaḍi iḍam
viḍu.

Put all the luggage on one side, and let there be room for me to sit.

இதைச்சொல்லி அவன் புறப்பட்டு வழியே போகையில் ஒரு குடியானவன் வந்து சலாம் செய்தான். Iḍaiççolli avan purrappaṭu vaṛiyê pôgaiyil oru kuḍiyânavan vandu salâm seydân.	Having said this, he got out, and as he went along the road, a ryot came up and made salâm.

Lesson XVI.—*With a Ryot.*

நீ எந்த ஊரான்? Nî enda ûrân?	Of what place are you?
ஐயா, நான் இந்தக் கிராமத்திலிருந்து வந்தேன். Aiyâ, nân indak girâmattilirundu vandên.	Sir, I came from this village.
நீ அந்த கிராமத்தின் பயிரிடுங் குடியா, அல்லது மணியக்காரனா? Nî anda girâmattin payiriḍung kuḍiyâ, alladu maṇiyakkâranâ?	Are you a farmer in that village, or the Manigâr?
ஆதியில் நானொரு கூலிக்காரன், ஆனால் சென்ற நாலு ஐந்து வருஷமாய் பயிரிட்டுக்கொண்டு வருகிறேன். Âdiyil nânoru kûlikkâran, ânâl senrra nâlu aindu varushamây payiriṭukkoṇḍu varugirrên.	At first I was a day labourer, but for the last four or five years I have been cultivating.
நீ புலங்களைப் பயிரிடுகிறாயா, அல்லது தோட்டம் வைத்துக்கொண்டிருக்கிறாயா? Nî pulangaḷaip payiriḍugirrâyâ, alladu tôṭam vaittukkoṇḍirukkirrâyâ?	Do you cultivate fields, or keep a garden?
நான் நன்செய் புன்செய் நிலங்களைப் பயிரிட்டு ஒரு தோட்டமும் வைத்துக்கொண்டிருக்கிறேன். Nân nançey punçey nilangaḷaip payiriṭu oru tôṭamum vaittukkoṇḍirukkirrên.	I cultivate a little of both dry and wet lands and keep a garden too.
புன்செய் நன்செயில் எவ்வளவு சாகுபடி செய்கிறாய், தோட்டத்தில் எவ்வளவு? Punçey nançeyil evvaḷavu sâgupaḍi seygirrây, tôṭattil evvaḷavu?	How much dry land do you cultivate? How much wet land, and how much garden?

நன்செய் நிலம் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன்; புன்செயில் இரண்டு காணி வாரத்துக்கு விழுகிறேன்; இதுவுமன்றி ஒரு தோட்டமுமுண்டு அதில் கரும்பு பயிரிடுகிறேன். Nançey nilam kuttagaikku eḍut-tirukkirrên; punçeyil iraṇḍu kâṇi vârattukku viṛugirrên; iduvuman-rri oru tôṭamumuṇḍu adil karum-bu payiriḍugirrên.	I have the dry land on rent; and of the wet land I plough two cawnies on vâram; and I have also a garden in which I plant sugar-cane.
சர்க்கார் பங்குக்கு எவ்வளவு கொடுக்கிறாய், உனக்கு என்ன வருகின்றது? Sarkkâr pangukku evvaḷavu koḍuk-kirrây, unakku enna varuginrra du?	How much do you pay the Government share, and how much have you for yourself?
மூன்றிலொரு பங்கை சர்க்காருக்குக் கொடுத்து மற்ற இரண்டு பங்கை நான் அநுபவிக்கிறேன். Mûnrriloru pangai sarkkârukkuk koḍuttu matta iraṇḍu pangai nân anubavikkirrên.	I pay one-third share to Government and enjoy two-thirds myself.
நிலத்துக்கு எவ்வளவு விதை செல்லுகின்றது? Nilattukku evvaḷavu vidai sellugin-rradu?	How much seed does the field take?
பன்னிரண்டு மரக்கால் கேழ்வரகு. Pannirandu marakkâl kêṛvaragu.	Twelve markâls of raggy.
வருஷத்தில் நூறு மரக்கால் கேழ்வரகு சாகுபடி செய்கிறாயா? Varushattil nûrru marakkâl kêṛvara-gu sâgupaḍi seygirrâyâ?	Do you grow hundred markâls of raggy a year?
ஏறக்குறைய அவ்வளவு, ஆனால் அது சர்க்காருக்குக் கிஸ்திகட்ட போதாமையாயிருக்கிறது. Êrrakkurraiya avvaḷavu, ânâl adu sarkkârukkuk kistikaṭa pôdâmai-yâyirukkirradu.	Nearly as much, but it is not enough to pay the Government kist.

Lesson XVII.—*With a Ryot.*—(continued.)

நன்செய் நிலத்தில் எத்தனை மரக்கால் சாகுபடியாகிறது ? Nançey nilattil ettanai marakkâl sâgupaḍiyâgirradu ?	How many markâls of paddy do you grow in the wet land ?
நன்செய் சாகுபடி செழிப்பாயிருந்தால் நானூறு மரக்கால் தானியம் விளையும், அதில் இருநூறு மரக்கால் என்பங்குக்கு வரும். Nançey sâgupaḍi seṛippâyirundâl nânûrru marakkâl dâniyam viḷaiyum, adil irunûrru marakkâl enpanggukku varum.	If the wet crop grow well it produces four hundred markâls of paddy, two hundred of which comes to my share.
தோட்டத்தில் என்ன செய்கிறாய் ? Tôṭattil enna seygirrây ?	What do you do in the garden ?
வாரத்துக்கு எடுத்திருக்கும் தோட்டத்தில் விளையும் தேங்காய், பாக்கு இவைகளும் மற்ற சிறுபயிர்களாகிய பழங்கள், தினை, கடலை முதலியவைகளிலும் சரிபாதி சர்க்காருக்குப் போகின்றது மற்ற பாதி என்பங்குக்கு வரும். Vârattukku eḍuttirukkum tôṭattil viḷaiyum têngây, pâkku ivaigaḷum maṯṯa sirrupayirgaḷâgiya paṛangaḷ, tinai, kaḍalai mudaliyavaigaḷilum saripâdi sarkkârukkup pôginrradu maṯṯa pâdi enpanggukku varum.	Exactly half the produce of the vâram garden, cocoanuts, arekanuts, and other small things such as fruits, millets, and Bengâl gram, &c., goes to Government, the remaining half comes to my share.
ஐயா, நான் தோட்டத்தின் விளைச்சலை விற்றுக் குத்தகைப்பணம் கட்டுகிறேனென்றும், நன்செய் புன்செய் நிலங்களின் சாகுபடியால் ஜீவனம் பண்ணுகிறேனென்றும் தங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறதே. Aiyâ, nân tôṭattin viḷaiççalai viṯṯuk kuttagaippaṇam kaṭugirrênenrrum, nançey punçey nilangaḷin sâgupaḍiyâl sîvanam paṇṇugirrênenrrum tangaḷukku nanrrâyt terindirukkirradê.	Sir, you see that I have to pay the rent in money by selling the produce of the garden, and live on the produce of the dry and wet lands.
கரும்பு தோட்டத்தில் உனக்குக் கிடைக்கிறதென்ன ? Karumbu tôṭattil unakkuk kiḍaikkirradenna ?	What do you get from the sugar-cane garden ?

அதில் நாலு வராகன் கிடைக்கிறது அது பயிரிடும் தொழிலைச் சரியாய் நடப்பிக்கும்படி எருதுமுதலியவைகளை வாங்குகிறதற்கு உதவுகிறது.

Adil nâlu varâgan kiḍaikkirradu adu payiriḍum toṛilaiç çariyây naḍappikkumbaḍi erudumudaliyavaigaḷai vângugirradarrku udavugirradu.

I get four pagodas, which serves me to buy bullocks and other things, so as to cultivate it properly.

நன்றாய்ச் சாகுபடியாகும் வருஷத்தில் சென்ற வருஷங்களிலுண்டான கடன்களை எல்லாம் தீர்த்து விடுகிறோம்.

Nanrrâyç çâgupaḍiyâgum varushattil senrra varushangaḷiluṇḍâna kaḍangaḷai ellâm tîrttuviḍugirrôm.

In the year in which the crop grows well, we clear off the debts of past years.

Lesson XVIII.—*On Learning Tamil.*

தமிழ்ப் பாஷையைக் கற்பதற்கு நானபேட்சை கொண்டவனா யிருக்கிறேன்.

Tamiṛp pâshaiyaik karrpadarrku nânabêḍçai koṇḍavanâ yirukkirrên.

I have a great desire to learn the Tamil language.

நான் தமிழ்ப் பேசமாட்டுவேனென்று நம்புகிறேன் அல்லது எண்ணுகிறேன்.

Nân tamiṛp pêsamâṭuvênenrru nambugirrên alladu eṇṇugirrên.

I wish I could speak Tamil.

நீ இங்கிலீஷ் பேசமாட்டுவையா ?

Nî ingilîsh pêsamâṭuvaiyâ ?

Can you speak English ?

நான் கொஞ்சம் பேசமாட்டுவேன்.

Nân koñjam pêsamâṭuvên.

I can speak a little.

நான் பேசுகிறதைப்பார்க்கிலும் நன்றாய் வாசிப்பேன்.

Nân pêsugirradaippârkkilum nanrrây vâsippên.

I can read better than I can speak.

எனக்குச் சில வார்த்தைகள் தெரியும்.

Enakkuç çila vârttaigaḷ teriyum.

I know a few words.

நான் வாசிக்கமாட்டுவேன் ஆனால் பேசமாட்டேன்.

Nân vâsikkamâṭuvên ânâl pêsamâṭên.

I can read but cannot speak.

நான் ஒரு தமிழ் இலக்கணம் வாங்கி யிருக்கிறேன். Nân oru tamiṛ ilakkaṇam vângi-yirukkirrên.	I have bought a Tamil Grammar.
வாசிக்க எனக்கு யார் கற்பிக்கமாட்டுவார்கள் ? Vâsikka euakku yâr karrpikkamâṭuvârgaḷ ?	Who can teach me to read ?
இலக்கண விதிப்படி தமிழ்க் கற்பிக்கின்றவர்களில் யாரையாவது நீ ரறிவீரா ? Ilakkaṇa vidippaḍi tamiṛk karrpikkinrravargaḷil yâraiyâvadu nî rarrivîrâ ?	Do you know any one who can teach Tamil grammatically?
சிந்தாத்திரிப்பேட்டையி லொரு முனிஷி இருக்கின்றார் அவர் தமிழில் மிகவும் சாமர்த்தியர். Sindâttirippêṭaiyi loru Munishi irukkinrrâr avar tamiṛil migavum sâmarttiyar.	There is a Moonshee at Chintâdripet, who is a very good scholar in Tamil.
அவர் பெயருனக்குத் தெரியுமா ? Avar peyarunakkut teriyumâ ?	Do you know his name ?
அவர்பேர் துரைசாமி பிள்ளை. Avar pêr Duraisâmi Piḷḷai.	His name is Dorasawmy Pillay.
அவரை சீக்கிரத்தில் வரவழையும். Avarai sîkkirattil varavaṛaiyum.	Please to send for him soon.
நான் தப்பிப்பேசினால் முனிஷி என்னைத் திருத்தும். Nân tappippêsinâl Munishî ennait tiruttum.	Moonshee, if I speak wrongly, correct me.
எத்தனைவரிகள் வாசிக்கவேண்டும் ? Ettanai varigaḷ vâsikkavêṇḍum ?	How many lines must I read ?
அந்த வாக்கியத்தை இங்கிலீஷில் மொழிபெயர். Anda vâkkiyattai Ingilîshil moṛipeyar.	Render that sentence into English.
நீ அதை தெரிந்துகொண்டையா ? Nî adai terindukoṇḍaiyâ ?	Do you understand it ?

Lesson XIX.—*On Loan.*

எனக்குப் பத்து ரூபாய் கடன் கொடு. Enakkup pattu rûbây kaḍan koḍu.	Lend me ten rupees.
நான் அவரிடத்தில் நூறு ரூபாய் கடன் வாங்கிக்கொண்டேன். Nân avariḍattil nûrru rûbây kaḍan vânggikkoṇḍên.	I borrowed of him a hundred rupees.
நான்-௰௨-மாதத்துக்குள்ளாக அதை வட்டியுடன் மறுபடியுங் கொடுக்கவேண்டும். Nân pannirandu mâdattukkuḷḷâga adai vaṭiyuḍan marrupaḍiyung koḍuk kavêṇḍum.	I am to re-pay him that sum with interest in twelve months.
வட்டி-௱க்கு-௮-விழுக்காடா யிருக்கும். Vaṭi nûṯṯukku eṭu viṛukkâḍâ yirukkum.	The interest will be eight per cent.
நீ ௰௨-மாதத்துக் குள்ளாகக் கொடுக்க மாட்டாய். Nî pannirandu mâdattukkuḷḷâgak koḍukka mâṭây.	You will not be able to pay it in twelve months.
நான் ௰௪-மாதம் பொறுப்பேன். Nân padinâlu mâdam porruppên.	I will allow you fourteen months.
இந்தபத்திரம் இது முதல் ௰௫-நாளைக்குள் கெடுவாகிறது. Inda pattiram idu mudal padinaindu nâḷaikkuḷ geḍuvâgirradu.	This bond becomes due fifteen days hence.
நீ எனக்குக் கொடுக்கவேண்டிய ௲-ரூபாயைக் கொடுக்கமாட்டுவையா? Nî enakkuk koḍukkavêṇḍiya âyiram rûbâyaik koḍukkamâṭuvaiyâ ?	Can you pay the thousand rupees due to me?
மூன்றுமாத கெடுவுக்கு இன்னான் பேருக்கு உண்டிகொடுக்க மாட்டுவேன். Mûnrrumâda keḍuvukku innân pêrukku uṇḍikoḍukka mâṭuvên.	I can give you a bill on such a one at three months' time.
நானுனக்கு-௰௭-ரூபாய் மாத்திரங் கொடுக்கவேண்டும். Nânunakku padinêṛu rûbây mâttirang koḍukkavêṇḍum.	I owe you only seventeen rupees.
நீ யேன் ௨௰-ரூபாய் கேட்கிறாய்? Nî yên irubadu rûbây kêṭkirrây ?	Why do you demand twenty rupees ?

உனக்கு எவ்வளவு பாக்கியோ வாங்கிக் கொள். Unakku evvaḷavu bâkkiyô vângikkoḷ.	Take what is due to you.
௫௱-ரூபாய் நோட்டை மாற்றிக் கொண்டு வா. Annûru-rûbây nôṭai mâṯṯik koṇḍuvâ.	Get me a change for a note of five hundred rupees.
எனக்கொரு ரூபாய்க்குச் சில்லரை கொடுக்கமாட்டுவையா ? Enakkoru rûbâykkuç çillarai koḍukkamâṭuvaiyâ ?	Can you give me a change for a rupee?
அவர் ௨௲-ரூபாய் கடன்பட்டிருக்கிறார். Avar iraṇḍâyiram-rûbây kaḍanpaṭirukkirrâr.	He has a debt of two thousand rupees.
அவர் இந்தமாதக் கடைசியில் கொடுக்கவேண்டும். Avar indamâdak kaḍaisiyil koḍukkavêṇḍum.	He should pay me on the last day of this month.
மேற்படி தொகையின் வட்டியை இப்போது கொடுக்கவேண்டும். Mêrrpaḍi togaiyin vaṭiyai ippôdu koḍukkavêṇḍum.	The interest to the above should be paid now.

Lesson XX.—*On General Business.*

ஷராப்பு, இந்த வுண்டியை யெடுத்துக் கொண்டுபோய்ப் பணம் வாங்கிக்கொண்டு துரிதமாக வா. Sharâppu, inda vaṇḍiyai eḍuttukkoṇḍupôyp paṇam vângikkoṇḍu turidam[illegible]ga vâ.	Sharof, take the draft and bring the money ; be quick.
என்ன செய்கிறது இப்போது-௰௧-மணி. Enna seygirradu ippôdu padinôru-maṇi.	What must be done ? It is now eleven o'clock.
தருணத்திற் கெனக்குப் பணமுதவும்படி சீக்கிரமாக வா. Taruṇattirr kenakkup paṇamudavumbaḍi sîkkiramâga vâ.	Be quick, that I may have the money in time.
ஒரு மணிக்குமுன் எனக்குக் கிடைக்கச் செய். Oru maṇikkumun enakkuk kiḍaikkaççey.	Let me have it by one o'clock.

திரவியசாலைக்குப்போய் பெரிய ஷராப்புடன் பேசு. Diraviyasâlaikkuppôy periya sharâp-puḍan pêsu.	Go to the Bank, and speak to the head sharof.
பாங்கி நோட்டை வாங்கிக்கொண்டு உண்டிக்குப் பணம் கொடுக்கும்படி சவுக்காருடன் சொல். Bângi nôṭai vângikkoṇḍu uṇḍikkup paṇam koḍukkumbaḍi savukkâ-ruḍan sol.	Tell the soukar to take bank notes, and pay the amount of the draft.
இப்போதே துரைக்குப் பணமனுப்பவேண்டும். Ippôdê duraikkup paṇamanuppa-vêṇḍum.	The money must now be sent to Mr.——.
மிச்சத்தை-௩-மணிக்குள்ளாகக் கொடுக்கும்படி உத்தரவு செய்யவேண்டுமென்று துரையினிடத்தில் மனுசெய்துக்கொள். Miççattai mûnrru-maṇikkuḷḷâgak ko-ḍukkumbaḍi uttaravu seyyavêṇḍu-menrru duraiyiniḍattil manu-seydukkoḷ.	Request Mr. —— to order what remains to be paid in before three o'clock.
நீ எப்போதாவது பஞ்சிலாலுடைய திரவியசாலைக்குப் போயிருக்கிறையா? Nî eppôdâvadu Bañjilâluḍaiya dira-viya sâlaikkup pôyirukkirraiyâ?	Have you ever been to Bunchilâl's Bank?
